**22.09.2014**

**Pastoral letter No/GR/ 19/ 2014**

**ஆயர் திருமுகம்**

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் அன்னை மரியாயின் திருநாளைத் தொடர்ந்து வினசெந்தியர் தங்கள் **சபை நிறுவனர் அருளாளர் பிரடரிக் ஓசானாம் (செப்டம்பர் 9), சபைப் பாதுகாவலர் புனித வினசென்ட் தெ பவுல்** (செப்டம்பர் 27) ஆகிய புனிதர்களின் திருநாள்களை செப்டம்பர் 28-ம் நாளாம் இன்று கொண்டாடுகிறார்கள்.இத்தருணத்தில் இப்புனிதர்களின் வாழ்க்கைமுறையை பின்பற்றி வாழ இறையருள் வேண்டுவோம். அனைவருக்கும் திருநாள் வாழ்த்துக்களை உளமாரதெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வின்சென்ட் தெ பவுல் சபையில் தன்னை இணைத்துக் கொள்வது என்பது **'துயருருவோரில் பாடுகள் அனுபவிக்கும் இயேசுவைக் கண்டு அவருக்கு பணிவிடை செய்யும் ஒரு புனித அழைப்பாகும்'**.

வின்செந்திய அழைப்பை ஏற்ற வாழ்வு என்பது **'புனிதத்தை நோக்கிய பயணம்'**ஆகும். ஏனெனில் உண்மையான புனிதம் என்பது, **ஒருவர் தன்னை கிறிஸ்துவிலும், அவரது அன்பிலும் முழுமையாக இணைத்துக் கொள்வதாகும்**. வின்செந்தியர் தங்களின் சொந்த குறைகளையும் இறையருளின் தேவைகளையும் உணர்ந்து கடவுளின் மகிமையைத் தேடுகிறவர்களாக இருக்கிறார்கள். சொந்த புகழையோ, பிரதிபலனையோ ஏற்காமல், கடவுளின் மேல் உள்ள அன்பிற்காக பிறர் துயர் துடைக்க முயற்சிப்பதே தங்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஏழை எவராக இருந்தாலும் **'பாடுகள் அனுபவிக்கும் கிறிஸ்துவை நோக்கும் பார்வையே'**அவர்களைப் பார்க்க வேண்டும். ஏழைகளை சந்திக்கும் போதும், தங்களை ஏழைகளுக்காக அர்ப்பணிக்கும் போதும், ஏழைகளின் ஏழ்மைப் பண்பு நம்மில் வளர்கிறது. நாமும் மாட்டுத்தொழுவில் பிறந்த இயேசுவைப் போலாகிறோம்.

நமது மறைமாவட்டத்தில் பெரும்பாலான பங்குகளில் வின்செந்தியர் பணி செய்கிறார்கள். பங்குகளில் நான் மேய்ப்புப் பணி சந்திப்பிற்காகச் செல்லும் போது வின்செந்தியர்களோடும் உரையாடல் நடத்துவது வழக்கமாகும். சந்திப்பின் போது நான் கண்ட சில உண்மைகளை உங்களொடு பகிர்ந்து கொள்கிறேன். சில கிளைச்சபைகள் சிறப்பாகச் செயல்படுகின்றன. நல்ல திட்டங்களைச் செயல்படுத்துகிறார்கள். சில கிளைச்சபைகள் உற்சாகமிழந்து, கூட்டம் ஒழுங்காக

கூட்டாமல் இருக்கின்றன. சில கிளைச்சபைகளில் சிலர் வேலைச் பளுவைச் சுமக்கின்றனர். மற்றவர் பொறுப்பற்ற நிலையில் வந்து செல்கின்றனர். சில கிளைச்சபைகளில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். சிலர் கருத்து வேறுபாடுகளால் சபைப்பணியிலிருந்து விலகியிருக்கிறார்கள். சில பங்குகளில் கிளைச்சபைகள் செயல்படவில்லை. தக்கலை மறைமாவட்டத்தில்

ஐம்பது வயதைத் கடந்த ஒரு சபை புனித வின்செண்ட் தெ பவுல் சபையாகும். ஐம்பத்தி ஓராம் வயதில் பயணிக்கும் வின்செந்தியர் அனைவரும் திருநாள்களைக் கொண்டாடும் இவ்வேளையில் வேறுபாடுகளை மறந்து ஒப்புரவு பெற்று, கிளைச்சபைகளில் மீண்டும் தங்களை இணைத்து பணி செய்ய முன் வரவேண்டும். ஏனெனில் வின்செந்திய அழைப்பைப் பெற்ற ஒருவர் வாழ்நாள் முழுவதும் வின்செந்தியராகவே விளங்குகிறார். ஒரு தடவை பெறும் எந்த அருள்பொழிவும் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. உப்பாகவும் ஒளியாகவும் விளங்க அழைக்கப்பட்ட நாம், விலகும்போது சாரமற்ற உப்பாகவும் ஒளி கொடா பொருளாகவும் ஒதுக்கப்படுகிறோம். சமுதாயத்திற்கு பயனற்றவர்களாக வாழ்வது இறைவனது விருப்பத்திற்கு மாறானது. மட்டுமல்ல ஏழைகளுக்கு பணி செய்ய அழைக்கப்பட்ட நாம் அப்பணியைச் செய்யாத போது, வேதனைப்படும் ஏழைகளின் முறையீட்டைக் கடவுள் கேட்பார். **அவர்களது கண்ணீர் நமது புனித வாழ்விற்கு எதிராக சான்று அளிக்கும்**. ஏழை லாசரை கவனிக்காத பணக்காரனுக்கு ஏற்பட்ட நிலை நமக்கும் ஏற்படும். எனவே திரும்புதல் அவசியமான ஒன்றாகும்.

நமது மறைமாவட்டத்தில் வின்செந்தியர் மூன்று பெரும் திட்டங்களான ஓசானாம் கல்வி மையம், ஆசாரிப்பள்ளத்தில் நோயாளிகளுக்கான இடம், தீராத நோயாளிகளுக்கு உதவிட காருண்யா நிதி உதவி ஆகியவற்றைச் செயல் படுத்தி வருகின்றனர். பொன்விழா ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாடினர். அனைத்து திட்டங்களுக்கும் பாடுபட்ட வின்செந்தியர், ஆதரித்த அருள் தந்தையர் மற்றும் பங்கு மக்கள் அனைவரையும் உளமார பாராட்டுகிறேன். ஆண்டுதோறும் வின்செந்திய புனிதர்களின் திரு நாள்களை சிறப்பிக்கும் போது எடுக்கப்படும் ஒரு ஞாயிறு காணிக்கை வின்செந்திய பணிகளுக்காக வழங்கப்படுகிறது. ஏராளமாக காணிக்கை வழங்கி அவர்களின் பணிகளை ஆதரிக்க வேண்டுகிறேன். தக்கலை மத்திய சபைக்கு புதிய தலைவராக பாலப்பள்ளம் பங்கைச் சேர்ந்த சகோ. ஐயாத்துரை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவருக்கும் அவருடன் பணியாற்ற உள்ள அனைத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் எனது ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். கடந்த ஆறு ஆண்டுகள் தலைமை பணியாளராக பணியாற்றிய சகோ. மணிவண்ணன் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **பிறருக்கு நன்மை செய்து வாழும் புனித வாழ்வில் ஆர்வமும் அர்ப்பணமும் கொண்டோர் தங்களை இச்சபையில் இணைத்துக் கொண்டு பணியாற்ற முன்வரவேண்டும்** என கேட்டுக் கொள்கிறேன்.

அனைவரையும் புனித வின்செண்ட் தெ பவுல், அருளாளர் பிரெடரிக் ஓசானாம் வழியாக **இறைவன் நிறைவாய் ஆசிர்வதிப்பாராக**.

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**

*தக்கலை மறைமாவட்ட ஆயர்*